DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.12/2023

Prosecution side witness for P.W.8

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. நாகராஜன்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.01.2026**

A1 present. A2 produced PTW.

<u>முதல்விசாரணை:–</u>

நான் பிறந்தது முதல் சாத்தான்குளம் வடக்கு ரதவீதியில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கண்ணன் எனது மாமா. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. சாட்சி காசி மகன் ராஜகோபால் என்பவரை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கண்ணன் என்னுடன்தான் வேலை பார்த்தார். கடந்த 2,3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் எனது மாமா என்னுடன் வேலைக்கு வரவில்லை. மறுநாள் காலையில்தான் எனது மாமா கண்ணன் சாத்தான்குளம் ஊரில் உள்ள கரையடி சுடலைமாடசுவாமி கோவில் பக்கம் தீக்காயம்பட்டு இறந்துகிடந்தார். அந்த இடத்தை சாத்தான்குளம் போலீசார் வந்து பார்த்து பார்வையிட்டு எழுதிக்கொண்டார்கள். அவ்வாறு எழுதிக்கொண்டதில் நான் கையெழுத்துசெய்து கொடுத்துள்ளேன். அந்த பார்வைமகசர் என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–3** ஆகும். அதில் 2 வதாக ராஜகோபால் என்பவர் கையெழுத்து செய்துள்ளார். சம்பவ இடத்திலிருந்து பொருட்களை கைப்பற்றியதற்கான உள்ள அத்தாட்சியில் 2 வது கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை பிரேத பரிசோதனை செய்த இடத்தில் வைத்து போட்டுக்கொடுத்தேன். அந்த அத்தாட்சியில் உள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ–4** ஆகும். என் முன்பாக போலீசார் சம்பவ இடத்திலிருந்து எந்த பொருட்களும் கைப்பற்றவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்களில் சிலவற்றிற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 23.08.2022 அன்று சாயங்காலம் 5.00 மணிக்கு சாத்தான்குளம் கரையடி சுடலைமாடசுவாமி கோவில் பக்கம் உள்ள சுடுகாடு பக்கம் நானும், சாட்சி ராஜகோபால் என்பவரும் வந்தோம் என்றும், அங்கு சம்பவ இடத்தை பார்வையிட்டுக்கொண்டிருந்த சாத்தான்குளம் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்திலிருந்து சாயங்காலம் 6.00 மணிக்கு இரத்தம்பட்ட மண் கொஞ்சம், இரத்தம்படாத மண் கொஞ்சம், பிரேதத்தின் அருகில் கிடந்த எரிந்த சாம்பல் கொஞ்சம், பிரேதத்தின் கழுத்து பக்கம்காணப்பட்ட எரிந்த வேட்டி துண்டுகள் 2, பிரேதத்தின் அருகில் காணப்பட்ட இரத்தக்கறை பட்ட 2 கான்கிரிட் துண்டுகள், சம்பவ இடத்தின் அருகே கிடந்த 5 தீக்குச்சிகள் கொண்ட கிசான் தீப்பெட்டி ஒன்று ஆகியவற்றை எங்கள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், அந்த அத்தாட்சியில் நானும், ராஜகோபாலும் கையெழுத்து செய்தோம் என்று போலீசார்விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (1ம் எதிரிதரப்பில்)

நான் கையெழுத்து செய்த 2 கையெழுத்துக்களும் பிரேத பரிசோதனை செய்யும் இடத்தில் வைத்துதான் போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடன் சாட்சியாக கையெழுத்து செய்த நபர் யார் என்னவென்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எதற்காக கையெழுத்துபோட்டுக்கொடுத்தேன் என்றும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் பிரேதத்தை பார்த்தபோது காலை 8.00 மணி இருக்கும் என்றால் சரிதான். அந்த பிரேதமானது அழுகிய நிலையிலும், சிதைந்து, எரிந்தும் இருந்தது என்றால் சரிதான். அந்தபிரேதம் யாருடைய பிரேதம் என்று கண்டுபிடிக்க இயலவில்லை என்றால் சரிதான். மாலைபொழுதில் போலீசார் இது கண்ணனின் பிரேதம் என்று சொன்னபிறகுதான் கண்ணனின் பிரேதம் என்று நம்பிக்கொண்டோம் என்றால் சரிதான். கண்ணன் வேறு எங்காவது போய் உயிருடன் இருக்கிறாரா அல்லது இறந்துபோய்விட்டாரா என்று தெரியாது என்றால் சரிதான்.

குறுக்குவிசாரணை (2ம் எதிரிதரப்பில்)

1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.12 19:40:31 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No.12/2023

Prosecution side witness for P.W.9

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. சுந்தர் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **12.01.2026**

A1 present. A2 produced PTW.

<u>முதல்விசாரணை:–</u>

நான் கடந்த 15 வருடங்களாக தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் வீரகுமாரபிள்ளை தெருவில் குடியிருந்து வருகிறேன். நான்மிட்டாய் வைத்து வியாபாரம் செய்து வருகிறேன். எம்.ஏ வரை படித்துள்ளேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன கண்ணனை தெரியும். அவர் எனது கடைக்கு அடிக்கடி வருவார். ஆஜர் எதிரிகளை தெரியாது. கண்ணன் கொலை வழக்கு சம்மந்தமாக யாரையும் போலீசார் கைது செய்யவில்லை. சாட்சி பாலமுருகனை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரிகள் கொடுத்ததாக உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது அல்ல. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்தும் என்னுடையது அல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 24.08.2022 ஆம் தேதி பகல் 2.00 மணிக்கு நானும், எனது நண்பன் இட்டமொழியை சேர்ந்த ராஜகோபால் மகன் பாலமுருகன் என்பவரும் எங்கள் தொழில் விசயமாக புதுக்குளம் போகவேண்டி புதுக்குளம் விலக்கு அருகே வந்து கொண்டிருந்தபோது சாத்தான்குளம் ஆய்வாளர் அவர்கள்

இந்த வழக்கு சம்மந்தமாக சாத்தான்குளம் நோக்கி வந்து கொண்டிருந்த TN69 D 3783 என்ற பதிவெண் உள்ள Hero splender மோட்டார் சைக்கிளை ஓட்டிக்கொண்டு வந்த ஆஜர் எதிரி தாவீது,மற்றும் பின்னால் அமர்ந்திருந்த எதிரி டேனி செல்வன் ஆகியோரை இந்த வழக்கு சம்மந்தமாக கைது செய்து எங்கள் இருவரையும் சாட்சியாக இருக்க அழைத்து எங்கள் முன்பு விசாரிக்க அவர்கள் தானாக முன்வந்து ஒரு வாக்குமூலம் கொடுத்தார்கள் என்றும், அந்த வாக்குமூலத்தில் இந்த வழக்கு சம்பவத்தை பற்றி சொல்லிவிட்டு இவ்வழக்கிற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை ஆய்வாளரிடம் ஒப்படைத்ததை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில்தான் நானும், பாலமுருகனும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும், பின்பு கொலைக்கு பயன்படுத்திய கல்லை காவல்நிலையத்தில்கைப்பற்றி வைத்திருந்ததை எதிரிகள் அடையாளம் காட்டினார்கள் என்றும் போலீசார்விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து உண்மையை மறைத்து பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.12

II Additional District & Sessions Judge,
Thoothukudi.